




Metro லீடர்
மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'









லீடர்: 04 | இதழ் - 271 | 17.08.2024 | பக்கங்கள்: 09 | editorml21@gmail.com | விலை: 75/-


# முஸ்லிம் தலைமைகளை நம்பி இனியும் ஏமாற முடியாது!

## ஹக்கீம், ரிஷாத், அதாவுல்லாஹ் ஜனாதிபதி வேட்பாளருடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் என்ன?

## ஒரே மேடைக்கு வருமாறு சமூக செயற்பாட்டாளர் ரஸ்மின் அழைப்பு







முஸ்லிம் கட்சித் தலைவர்கள் முஸ்லிம் சமூகம் சார்ந்த எந்த ஒப்பந்தங்களை ஜனாதிபதி வேட்பாளருடன் செய்து ள்ளீர்கள் என்பதை ஹக்கீம், ரிஷாத், அப்துர் ரஹ்மான், அதாவுல்லாஹ் ஆகியோர் ஒரே மேடைக்கு வந்து சொல்லுங்கள் என சமூக செயற்பாட்டாளர் எம்.ஐ.எம். ரஸ்மின் எழுத்து மூலம் அழைப்பு விடுத்துள்ளார்.

இவர்களுக்கான அழைப்புக் கடிதங்கள் வாட்ஸப் செயலி மூலம் அனுப்பி வைத்துள்ள தாகவும் தங்களது முடிவுகளை இன்று (17) மாலைக்குள் தெரியப்படுத்து மாறும் அவர் இவர்களை கோரியுள்ளதாவும் அவர் தெரிவித்துள்ளார். 02

# ரணிலுக்கு ஆதரவளிக்கும் 34 கட்சிகள் ஒப்பந்தம் கைச்சாத்து!





எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவளிக்கும் வகையில் 02

# மைத்திரி தேவையில்லை

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு மைத்திரிபால சிறிசேன தனது ஆதரவை தெரிவிக்க விரும்பினாலும், அந்த கோரிக்கையை அவர், நிராகரித்துள்ளதாக அமைச்சர் 02



## அலி ஸாஹிர் மௌலானா எம்.பி ரணிலுக்கு ஆதரவ



மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ஸெய்யிட் அலி ஸாஹிர் மௌலான நேற்று (16) வெள்ளிக்கிழமை ஜனாதிபதி ரணில் விககிரமசிங்ஹவை சந்தித்து தனது ஆதரவை தெரிவித்தார். கட்சி தாவினார் எனும் குற்றச்சாட்டின் கீழ் 02

## வாழ்க்கை செலவு 191 வீதத்தினால் அதிகரிப்பு

ரணில் விக்கிரமசிங்க கரை சேர்த்த நாட்டில் வாழ்க்கை செலவு கடந்த வருடத்தோடு ஒப்பிடும் போது 191% வீதத்தினால் 02

## எந்தப் பெண்ணும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவில்லை – அமைச்சர் கீதா கவலை

ஜனாதிபதித் தேர்தலில் எத்தனை வேட்பாளர்கள் போட்டியிட்டாலும் பெண்களின் பிரதிநிதித்



துவம் வழங்கப்படாமை மிகவும் வருத்தமளிக்கும் விடயம் என சிறுவர் மற்றும் மகளிர் 02

## முஸ்லிம் தலைமைகளை நம்பி...

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிழக்கு மாகாணத்தைக் காட்டிக் காட்டியே ஒப்பந்தங்கள் சிறுபான்மை முஸ்லிம் கட்சிகளால் செய்யப்படுகின்றது. ஆனால் அந்த ஒப்பந்தங்கள் ஆட்சிக்கு வந்தவுடன் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

நடைபெறவிருக்கும் ஜனாதிபதித் தேர்தலில் முஸ்லிம் கட்சிகள் தங்களது நிலைப்பாடுகளை அறிவித்துள்ளன. அதாவது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சஜித்தை ஆதரிப்பதாக அறிவித்துள்ளார். அதேபோல் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிஷாட் பதியுத்தீனும் சஜீத்தை ஆதரிப்பதாகவே அறிவித்துள்ளார். இதே சமயம் தேசிய காங்கிரஸ் தலைவர் ஏ.எல்.எம்.அதாஉல்லா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதாகவும் அறிவித்துள்ளார்.

இத்தேர்தலில் முஸ்லிம் சமூகம் சார்ந்த எந்த பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான முஸ்லிம் கட்சித் தலைவர்கள் தாங்கள் ஆதரிக்கும் வேட்பாளர்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளார்கள் என்பதை சமூகத்திற்கு தெரியப்படுத்தாமல் மூடுமந்திரம் போல் வைத்துக்கொண்டு இவர்கள் ஒப்பந்தகளை செய்துள்ளனர்.

ஆகவே நாங்கள் கேட்டுக்கொள்வது, இனியும் உங்களை நம்பி ஏமாற முடியாது. உங்கள் பக்க நியாயங்களையும் நீங்கள் செய்து கொண்ட ஒப்பந்தங்களையும் ஒரே மேடைக்கு வந்து மக்கள் முன் சொல்லுங்கள் என அழைக்கிறோம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## ரணிலுக்கு ஆதரவளிக்கும்...

34 கட்சிகள் மற்றும் கூட்டணிகள் இணைந்து ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளன.

'இயலும் ஸ்ரீலங்கா' புரிந்துணர்வு ஒப்பந்தம் என அழைக்கப்படும் இவ்வொப்பந்தத்தில் கைச்சாத்திடும் மாநாடு நேற்று (16) கொழும்பு வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் இடம்பெற்றது.

ஜனாதிபதி மற்றும் கட்சிகளின் பிரதிநிதிகள் இணைந்து முற்பகல் 10.06 மணி எனும் சுபநேரத்தில் அதற்கான ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

இம்மாநாட்டில் கையெழுத்திட்ட 34 அரசியல் கட்சிகள் மற்றும் கூட்டணிகள் அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கு மட்டுமல்லாது, நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கவுமாகுமென, 'இயலும் ஸ்ரீலங்கா' மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்

## மைத்திரி தேவையில்லை...

மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தேர்தல் குழுவின் பிரதிநிதிகள் குழுவைச் சந்தித்த போதே அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

மைத்திரிபால சிறிசேன போன்ற நம்பிக்கையற்ற நபரின் ஆதரவை தாம் ஒருபோதும் விரும்பவில்லை எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், "எங்கள் கட்சியின் முன்னாள் தலைவர் இப்போது எங்கும் இல்லாத நிலையில் இருக்கிறார்.

எந்தக் கட்சியும் அவரை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. உங்கள் தன்னம்பிக்கையை நீங்கள் அழிக்கும்போது, ஆதரவின்றியே இருக்க வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி ஒருவர் இவ்வளவு தாழ்வான நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது எமக்கு வருத்தமளிக்கிறது" என்றார்.

## அலி ஸாஹிர் மௌலானா எம்.பி...

நீதிமன்ற அனுமதியின் பிரகாரம் பதவி நீக்கம் செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட்டினால் ஏற்பட்ட வெற்றிடத்திற்கு அலி ஸாஹிர் மௌலானா நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கொரோனா மற்றும் ஈஸ்டர் தாக்குதல் காலங்களின் போது முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட அநீதம் மற்றும் அடக்கு முறைகளுக்கு எதிராக தனி ஒருவராக நின்று குரல்கொடுத்து பல பணிகள் ஆற்றியவர் அலி ஸாஹிர் மௌலானா என்பது குறிப்பிடத்தக்கது.

## வாழ்க்கைச் செலவு...

அதிகரித்துள்ளதாக தேசிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி குறிப்பிட்டார். வாழ்க்கை செலவு கடந்த வருடத்தோடு ஒப்பிடும் போது 191% வீதத்தினால் அதிகரித்துள்ள போது வருவாய் 50% வீதத்தினால் குறைந்துள்ளது என பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி மேலும் குறிப்பிட்டார்

## எந்தப் பெண்ணும் ஜனாதிபதி...

விவகார அமைச்சர் திருமதி கீதா குமாரசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் வியாழக்கிழமை (15) இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் கூட பெண்களுக்கு உரிய இடமும் சமமான இடமும் வழங்கப்பட வேண்டும் என கட்சித் தலைவர்கள் பெருமையுடன் கூறினாலும் பாராளுமன்றத்தில் பெண்களின் பிரதிநிதித்துவம் 6 சதவீதத்திற்கும் குறைவாகவே காணப்படுவதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

ஒரு நாட்டில் பெண் உரிமைகள் தொடர்பில் அனைத்து கட்சித் தலைவர்களும் அதிக அக்கறை காட்ட வேண்டும் என தெரிவித்த இராஜாங்க அமைச்சர், இம்முறை பெண் பிரதிநிதித்துவம் இல்லாத ஜனாதிபதி வேட்பாளர் பட்டியல் துடுப்பு இல்லாத படகு போன்றது எனவும் தெரிவித்தார்.

## சாணக்கியன் எம்.பிக்கும் ரணில் நிதியொதுக்கீடு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் இருந்து பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன், தனிப்பட்ட முறையில் 60 கோடி ரூபாயைப் பெற்றுக்கொண்டுள்ளதாக ரெலோ அமைப்பின் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணாகரம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

எவ்வாறாயினும் குறித்த குற்றச்சாட்டுக்குப் பதிலளித்துள்ள இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்,

மாவட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்களுக்காக பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான பன்முகப்படுத்தப்பட்ட நிதியே தமக்கு வழங்கப்பட்டதாகக் குறிப்பிட்டார்.

தம்மால் முன்வைக்கப்பட்ட முன்மொழிவுகளைக் கருத்திற்கொண்டு, வழங்கப்பட்ட அந்த நிதியில் தற்போது மாவட்டத்தில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த நிலையில் அரசியல் நோக்கத்திற்காக கோவிந்தன் கருணாகரம் இவ்வாறான குற்றச்சாட்டை முன்வைத்துள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்

# காது கேட்காத பெண் அழகியானார்!

தென்னாபிரிக்காவுக்கான 'Miss South Africa 2024' அழகிப் போட்டியில் காது கேட்காத 28 வயதான Mia le Roux எனும் பெண் வெற்றி வாகை சூடியுள்ளார்.

இவர், இப்பட்டத்தை வென்றுள்ள முதலாவது காது கேட்காத பெண் ஆவார்.

இந்த வெற்றி குறித்து அவர் தெரிவிக்கை யில்,

தனது வெற்றி, சமூகத்திலிருந்து ஒதுக்கப்பட்ட தன்னைப் போன்றோர் தங்களின் மிகப் பெரிய கனவுகளை நனவாக்க ஊக்குவிக்கும் என்று நம்பிக்கை கொண்டுள்ளதாகவும், நிதி நிலவரத்தால் ஒதுக்கப்பட்டவர்கள், மாற்றுத் திறனாளர்கள் ஆகியோருக்குத் தான் உதவ எண்ணம் கொண்டுள்ளதாக கூறியுள்ளார். ஒரு வயதில் காது கேட்காமல் போன இவருக்கு மேற்கொள்ளப்பட்ட 'கொஹ்லியர் இம்பிளான்ட்'



சிகிச்சை மூலம் ஒலிகளை அறிய முடிவதாகவும், தான் பேசத் தொடங்க, ஈராண்டுக ளுக்குப் பேச்சு சிகிச்சை பெறவேண்டியிருந்ததாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

Metro லீடர் மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'

Metro Media Network
502, Main Street, Sainthamaruthu- 14.
Sri Lanka.
Ads: 0779007738
News: 0772539298
Circulation: 0766735454

## சிறுபான்மை கட்சிகளை சிதறடிக்க வைக்கும் ஜனாதிபதி தேர்தல்!

ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் செப்டம்பர் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில் இத்தேர்தலில் போட்டியிடுவதற்காக 39 வேட்பாளர்கள் கட்டுப்பணம் செலுத்தியுள்ளனர்.

இந்நிலையில் வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்திலுள்ள சிறுபான்மை மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகள் என காட்டிக் கொள்பவர்கள் அங்கும் இங்கும் பேச்சுவார்த்தை நடாத்தி தமக்கு சாதகமான ஜனாதிபதி வேட்பாளருக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளதாக தெரிவிக்கின்றனர்.

அந்த வகையில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், ஒரு சில மலையக கட்சிகள் சஜித் பிரேதாஸவை ஆதரிப்பதற்கும், தேசிய காங்கிரஸ் மற்றும் முஸாரப் போன்றவர்கள் ரணிலுக்கு ஆதரவு வழங்கவுள்ளதாகவும் அறிக்கைகள் வெளிவந்த வண்ணமுள்ளன. இருந்த போதிலும் மக்களின் நியாயமான கோரிக்கைகளை முன்வைத்து எதிர்காலத்தில் தீர்வுகளை பெற்றுக்கொடுக்கும் நோக்குடன் எழுத்து மூலமான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப் பட்டுள்ளதா? ஏன்பது தொடர்பில் மக்கள் தெளிவற்றவர்களாக காணப்படுகின்றனர்.

கடந்த ஜனாதிபதி தேர்தலிலும் கூட மக்களின் முடிவின் பின்னரே கட்சிகள் முடிவெடுத்த வரலாறுகள் காணப்படுகின்றன. இந்த இடத்தில் பார்க்கப்பட வேண்டியது. மக்களின் பொருளாதார மற்றும் இன்னோரன்ன பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்கக்கூடிய தீர்வுத் திட்டமொன்றை கட்சிகள் முன்னிறுத்தி எழுத்து மூலமான ஆவணங்கள் கைச்சாத்திடப் பட்டுள்ளனவா? அவ்வாறாயின் ஒப்பந்தம் செய்துள்ள கட்சிகள் இதனை பகிரங்கமாக வெளியிடுமா? என்ற எதிர்பார்ப்புடன் காத்திருக்கின்றனர்.

சிறுபான்மை கட்சிகளை சுக்குநூறாக உடைத்து இத்தேர்தலில் வெற்றி பெற நினைத்திருக்கும் வேடபாளர் களுக்கும், மக்களை பகடைக்காய்களாக நினைக்கும் மக்கள் பிரதிநிதிகளுக்கும் சிறுபான்மை சமூகம் இத்தேர்தலில் சிறந்த பாடத்தை புகட்ட வேண்டும்.

editorml21@gmail.com

## பதவி விலகினார் ஜப்பான் பிரதமர்




ஜப்பானியப் பிரதமர் ஃபுமியோ கிஷிடா, ஜப்பானின் ஆளுங்கட்சித் தலைவர் பொறுப்பிலிருந்து எதிர்வரும் செப்டம்பர் மாதம் விலக இருப்பதாக ஜப்பானிய ஊடகம் செய்தி வெளியிட்டது.

டோக்கியோவில் நடைபெற்ற சிறப்பு செய்தியாளர் கூட்டத்தில், ஆளும் லிபரல் டெமாக்ரடிக் கட்சியின் தலைமைப் பதவியிலி ருந்தும், பிரதமர் பதவியிலிருந்தும் விலக முடிவு செய்துள்ளதா கவும் கட்சிக்கும், கட்சியின் புதிய தலைவருக்கும் முழு ஆதரவு அளிப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எம்பொக்ஸ் நோயால் உயிரிழப்பவரின் எண்ணிக்கை அதிகரிப்பு

ஆபிரிக்காவின் சில பகுதிகளில் பரவிவரும் குரங்கம்மை என்ற எம்பொக்ஸ் நோய் நிலையை உலக சுகாதார ஸ்தாபனம் பொதுச்சுகாதார அவசரகால நிலையாக பிரகடனப் படுத்தியுள்ளது.

குறித்த நோய் பரவல் காரணமாக கொங்கோ குடியரசில் மாத்திரம் 450 பேர் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த நிலையில் எம்பொக்ஸ் நோய் நிலைமை மத்திய மற்றும் கிழக்கு ஆபிரிக்காவின் சில பகுதிகளில் பரவியுள்ளது.

இந்த நோய் நிலைமை திரிபடைந்துள்ளதுடன் உயிரிழப்பு வீதமும் அதிகரித்துள்ளதாக விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

எம்பொக்ஸ் நோய் நிலைமை வேகமாகப் பரவுவதற்கான சாத்தியம் நிலவுவதாக உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த நோய் பரவலைத் தடுப்பதற்கு சர்வதேச ரீதியிலான ஒன்றிணைந்த முயற்சிகள் அவசியமாகுமென அவர் வலியுறுத்தியுள்ளார். உடலுறவு, தோலுடன் தோல் உரசுதல் மற்றும் சுவாசம் என்பவற்றின் ஊடாக இந்த நோய் பரவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## ரஷ்யாவிற்குள் ஊடுருவியுள்ள உக்ரைன் விதித்துள்ள புதிய நிபந்தனை



போர் அமைதிக்கு ரஷ்யா சம்மதம் தெரிவித்தால் ஊடுருவலை நிறுத்துவதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

உக்ரைன் ரஷ்யா இடையிலான போர் தொடர்ந்து கொண்டிருக்கை யில் அண்மையில் ரஷ்யாவிற்குள் உக்ரைன் படைகள் ஊடுருவியது.

உக்ரைனிய படைகளின் இந்த ஊடுருவல் காரணமாக கிட்டத்தட்ட 120000 க்கும் மேற்பட்ட மக்கள் குர்ஸ்க் பிராந்தியத்தில் இருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். மேலும் குறித்த பகுதியில் அவசர நிலையும் பிறப்பிக்கப்பட்டுள்ளது..

இரண்டாம் உலக போருக்கு பின்னர் ரஷ்ய நிலப்பரப்பிற்குள் நடந்த மிகப்பெரிய ஊடுருவலாக இது பார்க்கப்படுகிறது.

இந்நிலையில், ரஷ்யா போர் அமைதிக்கு ஒப்புக் கொண்டால், ரஷ்யாவில் உக்ரைனிய படைகள் கைப்பற்றிய பகுதிகளை கைவிட தயாராக இருப்பதாக உக்ரைன் தெரிவித்துள்ளது.

வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் Georgiy Tykhy தெரிவித்த தகவலில், போர் அமைதிக்கு ரஷ்யா எவ்வளவு விரைவாக சம்மதம் தெரிவிக்கிறதோ, அவ்வளவு விரைவாக ரஷ்யாவிற்குள் உக்ரைனிய பாதுகாப்பு படைகளின் தாக்குதல் நிறுத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

எனினும், ரஷ்யாவுக்குள் ஊடுருவி வரும் உக்ரைனிய படைகளுக்கு எதிராக தீவிர எதிர்ப்பு தாக்குல்களை ரஷ்ய படைகள் மேற்கொண்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இவ்வாறானதொரு பின்னிணியில், குர்ஸ்க் பிராந்தியத்தில் ஊடுருவியுள்ள உக்ரைனிய வீரர்களுக்கும் ரஷ்ய படைகளுக்கும் இடையில் நடந்துவரும் சண்டையில் இதுவரை 420 உக்ரைனிய வீரர்கள் கொல்லப்பட்டு இருப்பதாக ரஷ்யா அறிவித்துள்ளது.

இதேவேளை, குர்ஸ்க் பிராந்தியத்தில் உக்ரைன் படைகளால் ஏவப்பட்ட 4 ஏவுகணைகளை ரஷ்யா தாக்கி அழித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

## தாய்லாந்தின் புதிய பிரதமராக பேடோங்டார்ன் ஸினவத்ரா

தாய்லாந்தின் புதிய பிரதமராக பேடோங்டார்ன் ஸினவத்ராவை அந்நாட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுத்துள்ளனர்.

முன்னாள் தாய்லாந்து பிரதமர் தக்சின் ஸினவத்ராவின் மகளான 37 வயது பேடோங்டார்ன் ஃபியூ தாய் கட்சியின் தலைவர் ஆவர்.

இந்நிலையில், அவர் புதிய அமைச்சர்களைத் தேர்ந்தெடுப்பார் என்றும் அதனைத் தொடர்ந்து, தற்போதைய அமைச்சர்கள் பதவி விலகுவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு முன்பு அக்கட்சியைச் சேர்ந்த ஸ்ரெத்தா தவிசின் தாய்லாந்தின் பிரதமராகப் பதவி வகித்தார்.

சிறைக்கு அனுப்பப்பட்ட முன்னாள் வழக்கறிஞர் ஒருவருக்கு அமைச்சர் பதவியை வழங்கியதன் காரணமாக அவர் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டார். பிரதமர் பதவி ஏற்று ஓராண்டுகூட ஆகாத நிலையில் ஸ்ரெத்தா தமது பதவியை இழந்தார்.

இதை அடுத்து பேடோங்டார்ன் ஸினவத்ரா தாய்லாந்து அடுத்த பிரதமராகப் பதவி ஏற்க இருக்கிறார்.

## தாய்வானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

தாய்வானில் தொடர்ச்சியாக ஏற்பட்டுவரும் சக்திவாய்ந்த நிலநடுக்கங்களால் மக்கள் அச்சமடைந்து உள்ளதாக அந்நாட்டு ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

தாய்வானின் கிழக்கு நகரான ஹூவாலியனில் மீண்டும் 6.3 ரிச்டர் அளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

நேற்றைய தினம் 5.7 ரிக்டர் அளவிலான நிலநடுக்கம் உணரப்பட்டிருந்தது. அந்த வகையில் இது இரண்டாவது நிலநடுக்கம் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலநடுக்கம் பூமியில் இருந்து 9.7 கிலோமீட்டர்கள் ஆழத்தில் ஏற்பட்டுள்ளது.

EAST லீடர்

# சமூக வலைத்தளங்களில் சட்டவிரோத செயற்பாடுகள்: இலங்கை நீதிக்கான மய்யம் முறைப்பாடு

(எஸ்.ஏ.கான்)

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடவுள்ள தற்போதைய ஜனாதிபதி ரணிலின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் பல்வேறு சட்டவிரோத செயற்பாடுகள் இடம்பெறுவதாக இலங்கை நீதிக்கான மய்யம் தேர்தல் ஆணையகத்திற்கு முறைப்பாடு ஒன்றைச் செய்துள்ளது.

குறித்த முறைப்பாட்டில் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ முகநூல் பக்கத்தில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி முகப்புத்தக இடுகைகளுக்கான View, Comment, Like போன்றவற்றை செயற்கையான முறையில் அதிகரிக்க போட்ஸ்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக குறித்த முறைப்பாட்டில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

CJ Civilis equitas யுக்தி கேந்த்ரய நீதிக்கான மய்யம் Centre for Justice

இவ்வாறான View, Comment, Like என்பன போலி முகநூல் கணக்குகளைக் கொண்டு உருவாக்கப்படுகின்றன. இச் செயற்பாடானது வாக்காளர் மத்தியில் குறித்த ஜனாதிபதி வேட்பாளருக்கு அதிகமான ஆதரவு இருப்பதாக ஒரு தவறான புரிதலை ஏற்படுத்துவதால் இது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என இலங்கை நீதிக்கான மய்யம் தேர்தல் ஆணையகத்தை கோரியுள்ளது.

செயற்கை நுண்ணறிவினை இவ்வாறு பயன்படுத்துவது பேஸ்புக் நிறுவனத்தின் சமூக தரநிலைகள் மற்றும் இலங்கை ஜனாதிபதி தேர்தல் சட்டத்தின் ஏற்பாடுகளை மீறுவதாகவும் அமைந்துள்ளதாக இலங்கை நீதிக்கான மய்யம் சுட்டிக்காட்டி உள்ளது.

இவ்வாறான செயற்பாடுகள் ஒரு சிறந்த நியாயமான தேர்தல் ஒன்றை இந்நாட்டு மக்கள் சந்திப்பதற்கும் தங்களுக்கு விரும்பிய வேட்பாளரை தெரிவு செய்வதற்கான உரிமையை மட்டுப்படுத்துவதாகவும் அமைந்துள்ளது என இலங்கை நீதிக்கான மய்யம் குறித்த முறைப்பாட்டில் கூறியுள்ளது.

# சுகாதார நலன்கள் தொடர்பான பரிசோதனை



(ஹுதா உமர்)

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் இணைந்து கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி (தேசிய பாடசாலை) தரம் 06, 07, 10 பிரிவுகளிலுள்ள மாணவி களுக்கு சுகாதார நலன்கள் தொடர்பான பரிசோதனைகள் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை சுகாதார பரிசோதகர் ஏ.எம்.பாறூக் தலைமையில் கல்லூரி மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம், கல்லூரியின் பழைய மாணவியும் பிரபல மனநல மருத்துவரும் கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரியுமான எஸ்.எப். டாக்டர் ஸஹ்ரா சராப்தீன், டாக்டர். ஏ.ஆர்.எம் அஸ்மி, கல்லூரி அதிபர் ஏ.பி. நஸ்மியா சனூஸ், பிரதி அதிபர் என்.டி நதீகா, பகுதித் தலைவிகள், தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் உத்தியோகத் தர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள், ஆசிரியர்கள், மாணவிகள் என பலரும் கலந்து கொண்டனர்.

# அம்பாறை மாவட்ட பிரதம கணக்காளராக மஹ்ரூப் நியமனம்



(நூருல் ஹுதா உமர்)

திருகோணமலை மாவட்ட செயலக பிரதம உள்ளக கணக்காய்வாளராக கடமையாற்றிய சம்மாந்து றையைச் சேர்ந்த ஏ.எல்.மஹ்ரூப் அம்பாறை மாவட்டத்தின் பிரதான கணக்காளராக நியமிக்கப்பட்டு மாவட்ட அரசாங்க அதிபர் முன்னிலையில் உத்தியோக பூர்வமாக தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

இவா, அம்பாறை, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, கல்முனை, உகன, தமன ஆகிய பிரதேச செயலகங்களில் கணக்காளராக ஏற்கனவே கடமையாற்றி யுள்ளதுடன், சிறந்த நிர்வாகியுமாவார்.

# சாய்ந்தமருதில் முஸ்லிம் காங்கிரஸ் இளைஞர்களுடனான ஒன்றுகூடல்





(எம்.எஸ்.எம்.சாகிர்)

சாய்ந்தமருதில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி இளைஞர்களுடனான ஒன்றுகூடலும் சமகால அரசியல் தொடர்பான கலந்துரையாடலும் முன்னாள் கல்முனை மாநகர சபை முதல்வரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சர்வதேச விவகாரப் பணிப்பாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில் அவரது இல்லத்தில் (11) ஞாயிற்றுக்கிழமை இரவு இடம்பெற்றது.

இந்நிகழ்வில், பாராளுமன்ற உறுப்பினரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தேசிய தலைவருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டதோடு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய அமைப்பா ளரும் பாராளுமன்ற உறுப்பினருமான எம்.எஸ். தௌபீக், முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் எம்.எஸ்.உதுமாலெவ்வை, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் சாய்ந்தமருது அமைப்பாளர் எம்.ஐ.எம். பிர்தௌஸ், கல்முனை மாநகர சபை வேட்பாளர் எம் எம்.பாமி, சாய்ந்தமருது மத்திய குழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பெருந்திரளான இளைஞர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இதன்போது விளையாட்டு கழகங்களிற்கு விளையாட்டு உபகரணங்கள் கையளிக்கப் பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# அளவை மற்றும் நிறுவை உபகரணங்களை சரிபார்த்து முத்திரையிடல்

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்ட செயலகத்தின் அளவீட்டு சேவைகளினதும் உபாயங்களினதும் பிரிவினரால் கல்முனை பிரதேச செயலகத்திற் குட்பட்ட கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை, பெரியநீலவணை, ஆகிய பிரதேச வியாபாரிகளின் அளவை நிறுவை உபகரணங்களை 2024/2025 ஆம் ஆண்டுக்கு சரிபார்த்து முத்திரை பதிப்பதற்கென கடந்த திங்கட்கிழமை (12) முதல் 04 நாட்கள் கல்முனை பிரதேச செயலக வளாகத்தில் மேற்கொள்ளப் பட்டதாக பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி தெரிவித்தார்.

இதன் போது இலத்திரனியல் தராசுகள் பாரம்பரிய தராசுகள் நிறுக்கும் உபகரணங்கள் உள்ளிட்ட பல்வேறு அளவீட்டுடன் கூடிய தராசுகள் சரி பார்க்கப்பட்டு சீல் செய்யப்பட்டு தரச்சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் தராசுகளை பரிசோதனை செய்து சரி



பார்க்கும் சான்றிதழ் இன்றி பல வியாபாரிகள் மோசடி நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவது தொடர்பிலும் மக்களினால் குற்றச்சாட்டும் முன்வைக்கப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

எனவே அளவீட்டு தராசுகளுக்கான தரச் சான்றிதழ்களை 1995 ஆம் ஆண்டு 35 ஆம் இலக்க அளவீட்டு அலகுகளும் நியமங்களும் மற்றும் சேவைகளும் சட்டத்தின் பிரகாரம் 2024/ 2025 ஆம் ஆண்டிற்கான நிறுக்கும் அளக்கும் உபகரணங்கள் பரீட்சித்து முத்திரையிடல் என்பதுடன் மேற்குறித்த சட்டத்தின் 37 ஆவது பிரிவின் படி முன்பின்னாக 12 மாத கால இடைவெளி யில் முத்திரையிடாது நிறுவைகள் பாவித்தல் அல்லது வெளிக்காட்டி வைத்தல் தண்டனைக்குரிய குற்றமாகும்.

# ஹக்கீமின் சுயநல அரசியலுக்காகவே சஜிதுக்கு நிபந்தனையற்ற ஆதரவு

## கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவர் ஜெமீல் காட்டம்

(அஸ்லம் மௌலானா)




தனது சுயநல அரசியலுக்காகவே ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சமூக நலன் கருதிய கோரிக்கைகளை முன்வைக்காமல், நிபந்தனை ஏதுமின்றி சஜித் பிரேமதாசவை ஆதரிக்கும் தீர்மானத்தை மேற்கொண்டிருக்கிறார் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களுக்கான ஒருங்கிணைப்பாளரும் கிழக்கு மாகாண சபையின் முன்னாள் குழுத் தலைவருமான கலாநிதி ஏ.எம். ஜெமீல் விசனம் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலானது நாட்டினதும் மக்களினதும் எதிர்கால சந்ததியினரதும் தலைவிதியை தீர்மானிக்கப் போகின்ற முக்கியத்துவமிக்க தேர்தலாக கருதப்படுகிறது.

கோட்டாபய அரசாங்கத்தினால் நாட்டின் பொருளாதாரம் சீரழிக்கப்பட்டு, அதலபாதாளத்திற்குள் தள்ளப்பட்ட இந்த நாட்டை தனியொருவனாக துணிச்சலுடன் பொறுப்பேற்று, வீழ்ந்த பொருளாதாரத்தை குறுகிய காலத்தினுள் கட்டியெழுப்பி, நாட்டையும் மக்களையும் காப்பாற்றிய ஒரு தலைவராகப் போற்றப்படுகின்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தொடர்ந்தும் ஆட்சி அதிகாரத்தில் வைத்திருப்பதா அல்லது அந்த இக்கட்டான தருணத்தில் நாட்டைப் பொறுப்பேற்கப் பயந்து ஓடி ஒளிந்த கோழைகளை ஆட்சியில் அமர்த்துவதா என்பதே இத்தேர்தலின் தொனிப் பொருளாக அமைந்திருக்கிறது.

முஸ்லிம் சமூகத்தின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூப் ஹக்கீம், பொறுப்பற்ற முறையில், தனக்களிக்கப்பட்ட அமானிதத்தையும் பேரம் பேசும் சக்தியையும் முழுக்க முழுக்க தனது சொந்த சுயநல அரசியலுக்காக ஏலம் போட்டிருக்கிறார். மறைந்த எமது பெருந்தலைவர் எம்.எச்.எம். அஷ்ர.்.பின் தலைமைத்துவ ஆசனத்தில் இருந்து கொண்டு முற்றிலும் அவருக்கு மாற்றமான அரசியல் நிலைப்பாட்டிலேயே ரவூப் ஹக்கீம் பயணித்துக் கொண்டிருப்பதும் சமூக நலன்கள், அபிலாஷைகள் மற்றும் பிரச்சினைகளுக்கான தீர்வுகள் தொடர்பில் எவ்வித கரிசனையும் கொள்ளாமல் தனது அரசியல் இருப்பை தக்க வைத்துக் கொள்ள நினைக்கின்றார் என ஏ.எம்.ஜெமீல் தெரிவித்துள்ளார்.

# 34 வது வருட சுஹதாக்கள் நினைவு தினம் ஏறாவூரில் அனுஷ்டிப்பு



(உமர் அறபாத்)



ஏறாவூரில் 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் விடுதலைப்புலி பயங்கரவாதிகளால் வெட்டியும், சுட்டும், கடத்தப்பட்டும் படுகொலை செய்யப்பட்ட சுஹதாக்களின் 34 ஆவது வருட நினைவு தினம் (12) ஏறாவூரில் அனுஷ்டிக்கப்பட்டது.

ஏறாவூர் சுஹதாக்கள் ஞாபகார்த்த பேரவையின் தலைவர் எம்.எல்.ஏ.லத்தீப் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், மரணித்த உறவுகளுக்காக கத்தமுல் குர்ஆன் ஓதப்பட்டு விஷேட துஆப் பிரார்த்தனையும் இடம்பெற்றதோடு சுஹதாக்கள் பற்றிய நினைவுரையும் நிகழ்த்தப்பட்டது.

மேற்படி நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செய்யித் அலி ஸாஹிர் மௌலானா மற்றும் உலமாக்கள்,கல்விமான்கள், மத்ரசா மாணவர்கள் சுஹதாக்களின் உறவினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த மிலேச்சத்தனமான இனப் படுகொலையின் போது அப்பாவி பொதுமக்கள் 121 பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சமாதான நீதவானாக நியமனம்



இல 27-6 கம்மடுவ வீதி, இரத்தோட்டையை வசிப்பிடமாகக் கொண்ட ஜயகுமார் ஷான் அண்மையில் மாத்தளை மாவட்ட நீதிமன்ற நீதிபதி நாமல் பெரேரா முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதவானாக சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

இவர், ஸ்ரீபாத தேசிய கல்வியற் கல்லூரியில் ஆசிரியர் பயிற்சி பெற்று மொனராகலை சரஸ்வதி தமிழ் வித்தியாலயம், விபுலாநந்தா தமிழ் மகா வித்தியாலயம், ஸ்ரீ சண்முகா தமிழ் மகா வித்தியாலயங்களில் ஆசிரியராக கடமையாற்றி தற்போது மாத்தளை கம்மடுவ தமிழ் மகா வித்தியாலயத்தில் கடமையாற்றுவது குறிப்பிடத்தக்கது.

# திருமலை ஊடகவியலாளர்களுக்கு இருநாள் செயலமர்வு



(எம்.ஏ.முகமட்)

நிகழ்நிலை காப்புச் சட்டம் தொடர்பாக திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட இருநாள் செயலமர்வு கடந்த சனி மற்றும் ஞாயிறு ஆகிய இரு தினங்கள் தனியார் விடுதியில் இடம்பெற்றது.

இதன்போது மரணித்த ஊடகவியலாளர்களுக்கு ஒரு நிமிட மௌன பிரார்த்தனை இடம் பெற்றது.

எழுத்தாணி பவுண்டேசன் அமைப்பின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இச்செயலமர்வில் நிகழ்நிலை காப்புச் சட்டம் பற்றி சட்டத்தரணி ஐங்கரன் மற்றும் கிழக்கு பல்கலைக்கழக விரிவுரையாளர் அ.சஜ்ஜித் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டு ஊடகவியலாளர்களுக்கு தெளிவூட்டினர்.

இந்நிகழ்வில், திருகோணமலை மாவட்டத்திலுள்ள 20 இற்கு மேற்பட்ட ஊடகவியலாளர்கள் மற்றும் எழுத்தாணி பவுண்டேசன் அமைப்பின் பணிப்பாளர் வடமலை ராஜ்குமார், மாவட்ட அரசாங்க தகவல் உத்தியோகத்தர் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# பாராட்டி கௌரவிப்பு



(அஸ்ஹர் இப்றாஹிம்)

தேசியமட்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியின் முதல் சுற்றில் தெரிவு செய்யப்பட்ட 6ஆம் தர மாணவன் வை.எம். ஹிக்காமை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு மாவடிப்பள்ளி அல் அஸ்றப் மகா வித்தியாலய அதிபர் ஏ.எல். றஜாப்தீன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில், அதிதிகளாக கல்முனை வலயக்கல்வி பணிமனையின் கல்வி அபிவிருத்திக்கு பொறுப்பான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.எச்.றியாஸா, காரைதீவு கோட்டக் கல்வி பணிமனையின் பணிப்பாளரும் கணிதப்பாட பிரதி கல்வி பணிப்பாளருமான ஏ.சஞ்சீவன், பாடசாலை அபிவிருத்தி சங்க செயலாளர் மற்றும் உறுப்பினர்களும் பிரதி அதிபர், பகுதி தலைவர்கள், ஆசிரியர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், பயிற்சி ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், மாணவன் வை.எம்.ஹக்கீமின் பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.

# சம்மாந்துறையில் நகை கொள்ளையில் ஈடுபட்ட ஒருவர் கைது!

(தில்சாத் பர்வீஸ்)



சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மல் 9ஆம் வீதியில் அமைந்துள்ள வீட்டில் பெண் ஒருவர் உறங்கிக் கொண்டிருக்கும் போது (11) அதிகாலை வேளை 3 மணியளவில் முகமூடி அணிந்த நபர் ஒருவர் பெண்ணை தாக்கி விட்டு நகைகளை கொள்ளையடித்து சென்றதாக சம்மாந்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலதின் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான குழுவினரின் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்ட போது, கல்முனை பிரதேசத்தில் உள்ள நகைக்கடை ஒன்றில் திருடப்பட்ட நகையை மீட்டுள்ளதுடன், திருட்டு சம்பவத்தில் தொடர்புடைய நபரை சம்மாந்துறை பிரதேசத்தில் வைத்து கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை சம்மாந்துறை பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.



லிட்டில் பேர்ட் வை.எம்.சி.ஏ முன்பள்ளி மாணவர்களின் வருடாந்த விளையாட்டுப் போட்டி (10) மட்டக்களப்பு - சீலாமுனை யங் ஸ்டார் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு வலயக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் அனுரேகா விவேகந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

படம்: மட்டு. துஷாரா

# நியூமோனியா

# நுரையீரல் தொற்று நோய்



மட்டு. துஷாரா

நியூமோனியா மிகக் கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நுரையீரல் தொற்றுநோயாகும். இது நுரையீரல் செல்களில் நேரிடும் அழற்சியால் ஏற்படுகிறது. இதில் ஹீமோபிலஸ், கிளமிடோபிலா, மைக்கோபிளாஸ்மா போன்ற நியூமோனியா வகைகளும் காணப்படுகின்றன. வைரஸ்கள், பக்டீரியாக்கள் அல்லது பூஞ்சைகளால் நுரையீரலில் தொற்றை ஏற்படுத்துகின்றது. நியூமோனியா இலேசான பாதிப்பாகவோ அல்லது சில நிகழ்வுகளில் உயிரிழப்பை ஏற்படுத்தும் பெரிய பாதிப்பாகவோ இருக்கும்.

நுரையீரலில் மிகவும் சிறிய காற்றுப்பைகள் உள்ளன. அல்வியோலி (alveoli) என்று அழைக்கப்படுகின்றன. இவை பக்டீரியா தொற்றுக்கு உள்ளாகும்போது நியூமோனியாவை உண்டாக்குகிறது. உடலில் அல்வியோலிவின் செயற்பாடு மிகவும் முக்கியமானதாகும். சுவாச செயற்பாடுகளில் ஒக்சிஜன், காபனீரொட்சைட் ஆகியவற்றின் பரிமாற்றங்கள் நுரையீரலின் சிறிய காற்றுப்பைகள், இரத்தம் வாயிலாகவே நடைபெறுகிறது. அல்வியோலி வாயிலாக ஒக்சிஜன், உடலின் அனைத்து செல்களுக்கும் அனுப்பப்படுகிறது.

பக்டீரியா தொற்றுகள் காரணமாக, அல்வியோலிவில் நீர் அல்லது சீழ் சேர்கிறது. இது அதன் செயற்பாட்டைக் குறைப்பதால் சுவாசத்தில் பிரச்சினையை ஏற்படுத்தி காற்றுப்பைகளில் நீர் சேர்வதால் ஒக்சிஜனின் தரம் குறைந்து இரத்தத்தில் ஒக்சிஜன் கலக்கும் செயல்முறையைத் தடுக்கிறது. இத்தொற்று பல வழிகளில் ஏற்படுகின்றது. அதாவது, முதல்நிலை நியூமோனியா, ஆரோக்கியமான நுறையீரலில் ஏற்படுகிறது. இரண்டாம் நிலை நியூமோனியா ஏற்கெனவே சிதைவுற்ற நுரையீரலில் அல்லது நோய் தொற்றுவின் காரணமாக கடந்த காலங்களில் காயப்பட்ட நுரையீரல் அல்லது பிறவிக்கோளாறுகள் உள்ள நிலையில் ஏற்படுகின்றது.

கொரோனா காலகட்டத்தில் கொவிட் 19 வைரஸ் தொற்றின் காரணமாக, பல இலட்சம் நோயாளிகள் பாதிக்கப்பட்டனர். கொவிட் - நியூமோனியா தொற்றுக் காரணமாக உலகளவில் 66 கோடி மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். சுமார் 66.1 இலட்சம் பேர் இதன் காரணமாக உயிரிழக்கவும் நேரிட்டது. 2019 ஆம் ஆண்டு தொடங்கிய கொரோனா வைரஸ் பரவல் இன்னும் முழுவதுமாக முடிந்த பாடில்லை. இதன் பாதிப்பும், இறப்பும் இன்னும் தொடர்ந்த வண்ணமே உள்ளது.

பக்டீரியா, வைரஸ்கள் ஆகியவற்றின் காரணமாகவே நியூமோனியா ஏற்படுகிறது. பக்டீரியாவால் ஏற்படும் நியூமோனியாவுக்கு பக்டீறியாக்கள் முக்கிய காரணமாக இருக்கின்றன. இது மக்களிடம் தொற்றுவதுடன் பரவவும் செய்கிறது. குறிப்பாக, ஆர்.எஸ்.வி வைரஸ் சிறு குழந்தைகளுக்கு நியூமோனியா வர முக்கிய காரணமாகவும் அமைகின்றது.

பரா இன்ஃபுளூவன்ஸா, இன்ஃபுளூவன்ஸா வைரஸ், கொரோனா வைரஸ் மற்றும் ரைனோவைரஸ் ஆகியவற்றின் காரணமாகவும் பல்வேறு வகையான பூஞ்சைகளாலும் நியூமோனியா ஏற்படக் காரணமாக இருக்கின்றது. நியூமோனியாவுக்கும் கொரோனாவுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. கொரோனா என்பது கொவிட் வைரஸால் உண்டாகும் ஒரு வைரஸ் காய்ச்சலாகும். நியூமோனியா நுரையீரலில் ஏற்படும் தொற்று நோயாகும். இதைத்தான் நியூமோனியா காய்ச்சல் என்கின்றோம்.

வைரஸ் அல்லது கிருமி நியூமோனியா பாதிப்பை ஏற்படுத்துவதற்கும் உடலின் வழியே பரவுவதற்கும் சில நாட்கள் முதல் சில வாரங்கள் வரை எடுக்கின்றது என்றும், பல்வேறு காரணங்களால் நியூமோனியாத்தொற்று பரவக்கூடுமென உலக சுகாதார நிறுவனம் கூறுகின்றது. குழந்தைகளின் தொண்டை, மூக்கு பகுதிகளில் வைரஸ், பக்டீரியாக்கள் இருப்பதால் இந்நோய் ஏற்படுகிறது. இந்தக் கிருமிகள் நுரையீரலில் நுழைந்து நுரையீரலைத் தொற்றுகின்றன. ஒருவர் இருமும்போது வெளிப்படும் கிருமிகள், காற்றில் சிறிய துளிகளாக மக்கள் மத்தியில் பரவுகின்றன. இது தவிர, குழந்தை பிறப்பின் போதோ அல்லது பிறந்த பின்னரோ இரத்தத்தின் மூலம் நியூமோனியா பரவ வாய்ப்புகள் உள்ளது.

பொது இடங்கள், மருத்துவமனை மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகள்,



சுவாசக் கருவிகளைப் பயன்படுத்துதல், உணவு மற்றும் எச்சிலை சுவாசிப்பதாலும் நியூமோனியாத் தாக்கம் பரவ வாய்ப்புள்ளது.


இந்நோய் எந்த வயதினரையும் பாதிக்கலாம். குறிப்பாக, நோயெதிர்ப்பு சக்தி குறைவாக இருக்கின்ற ஆறு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கும், 60 வயதைக் கடந்தவர்களையுமே அதிகம் பாதிக்கின்றது. அதாவது, உடலில் நோயெதிர்ப்பு சக்தி குறைவாக இருந்தால் நியூமோனியா வர வாய்ப்புகள் அதிகமாகும். நீரிழிவு நோய், புகை பிடித்தல் மற்றும் மது அருந்தும் பழக்கம் உள்ளவர்கள், ஆஸ்த்துமா உள்ளிட்ட நெஞ்சு சளி பிரச்சினை உள்ளவர்கள், கர்ப்பிணிகள், இதய நோயால் பாதிக்கப்பட்டவர்கள், சிறுநீரக பாதிப்புக்குள்ளானவர்கள், புற்றுநோய்க்கு எடுக்கும் ஸ்ட்ரோயிட்ஸ் மருந்துகளை பாவிப்பவர்களை நியூமோனியா தாக்குவதற்கு வாய்ப்புண்டு.

மேலும், நாட்பட்ட மூச்சுக்குழாய் அடைப்பு நோயினால் அவதிப்படுபவர்கள் 90 சதவீதம் இந்த நோயினால் தாக்கப்படலாம். அதுபோன்று எச்.ஐ.வியால் பாதிக்கப்பட்டவர்களையும், கீமோதெரபி செய்பவர்களையும் நியூமோனியா விரைவில் தாக்குகின்றது. இவர்களுக்கு விரைவில் உயிராபத்து ஏற்படக் காரணமாகவும் அமையும். எனவே இரண்டு அல்லது மூன்று அறிகுறிகள் தென்பட்டவுடனே வைத்தியரை அணுகி எதிர்ப்பு மருந்துகள், சிகிச்சைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

தொற்றின் அறிகுறிகளைப் பொறுத்து சில நோயாளிகளுக்கு இலேசானதாகவும் அல்லது சிலருக்கு உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தக் கூடியதாகவும் இருக்கும். அதாவது, சுவாசிப்பதில் தடை, சுவாசிப்பதில் சிரமம் மற்றும் மேலோட்டமான சுவாசம், மூச்சுத் திணறல், மூச்சு வாங்குதல், இதயத்துடிப்பு அதிகரித்தல்,சுவாசிக்கும் போதும் இருமும்போதும் மார்பு வலி, சளி அல்லது சளியை உருவாக்கும் இருமல், சோர்வு, பசியின்மை, காய்ச்சல், குளிர்ச்சி மற்றும் அதிக வியர்வை, குமட்டல், வாந்தி, வயிற்றுப்போக்கு, மலச்சிக்கல், கைகால் கணுக்காலில் வீக்கம், உதடுகள் வெளிறிப்போதல் அல்லது நீலம் பூத்தல், காதுவலி, மங்கலான பார்வை, வாசனை இழப்பு அல்லது தொடுதல் இழப்பு போன்ற அறிகுறிகள் காணப்படும்.

நியூமோனியா குழந்தைகளைத் தாக்கும்போது பல அறிகுறிகள் தென்பட்டாலும் அதில் காய்ச்சல், சுவாசிப்பதில் சிரமம், மேலோட்டமான சுவாசம், அடிவயிறு செயற்பாடு போன்றவற்றின் முக்கிய அறிகுறிகளை வைத்து அடையாளம் கண்டுகொள்ளலாம்.

அதாவது, காய்ச்சல் - பல்வேறு காரணங்களால் குழந்தைகளுக்கு காய்ச்சல் ஏற்படும். கிருமிகள் அழிக்கப்பட்டவுடன் இந்தக் காய்ச்சல் குணமாகிவிடும். இது குழந்தைகளிடம் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். எனினும் காய்ச்சல் மிகவும் அதிகமாக அல்லது மருந்துகள் கொடுத்தும்




குணமாகவில்லை என்றாலோ, குழந்தைகள் செயலின்றி காணப்பட்டாலோ அந்தக் குழந்தையை உடனடியாக வைத்தியரிடம் அழைத்துச் செல்ல வேண்டும்.

சுவாசிப்பதில் சிரமம் - குழந்தைகளின் சுவாச ஓட்டம் நாளொன்றுக்கு பலமுறை வேறுபட்டு காணப்படும். ஒருவேளை இத்தொற்று ஏற்பட்டிருந்தால் குழந்தை சுவாசிப்பதற்கு சிரமப்படத் தொடங்கும். சில குழந்தைகள் சுவாசிக்கும்போது விசில் போன்ற சத்தத்துடன் சுவாசிப்பார்கள்.

**6ஆம் பக்கத் தொடர்ச்சி....**

மேலோட்டமான சுவாசம் - அதாவது, பாதிப்பின்போது நுரையீரலில் நீர் சேர்வதால் சுவாசிப்பதில் சிக்கலை ஏற்படுத்துகிறது. குழந்தைகளைப் பொறுத்தவரை மேலோட்டமான சுவாசம் என்பது விரும்பத்தகுந்ததல்ல. இதுபோன்ற நிகழ்வுகளில் குழந்தை வழக்கத்துக்கு மாறாக மிகவும் அமைதியாக இருந்தால், உடனடியாக வைத்திய ஆலோசனையைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

அடிவயிறு செயற்பாடு - குழந்தைகளின் அடிவயிறு

இயக்கத்தை பெற்றோர் கண்காணிக்க வேண்டும். குழந்தை சுவாசிப்பதற்கு சிரமப்பட்டாலோ அல்லது சுவாசிக்க சிக்கலாக இருந்தாலோ அதனை பெற்றோர் அறிந்து கொள்ள வேண்டும். குழந்தை சளியால் பாதிக்கப்பட்டால், தொடர்ந்து அதாவது, வரும் என்று அர்த்தமல்ல. ஆனால், இந்த முக்கிய அறிகுறிகளில் நாம் விழிப்போடு இருந்தால், அதாவது, நியூமோனியாவின் தாக்கத்திலிருந்து எம் குழந்தைகளை பாதுகாக்க முடியும்.

நீரிழிவு நோயாளிகள், ஆஸ்த்துமா, நுரையீரல் நோய்களால் பாதித்தவகள், ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகள் உள்ளிட்டோர் நியூமோனியா காய்ச்சல் குறித்து கூடுதல் எச்சரிக்கையுடன் இருத்தல் அவசியமாகும். உரிய மருத்துவக் கண்காணிப்பு இல்லாத பட்சத்தில் நியூமோனியா காய்ச்சலால் பாதிக்கப்பட்டு சிலவேளைகளில் உயிரிழக்கவும் நேரிடுகிறது.

குறிப்பாக, ஒருவருக்கு நியூமோனியா ஏற்படும் நிலையில், தனிநபர் சுகாதாரம் பேணுவதுடன் முகக்கவசம் அணிந்து கொள்வதன் மூலம் ஏனையவர்களுக்கு தொற்றுப் பரவுவதை தடுக்க முடியும்.

# அரசியல் ‘அநாதை’யானார் மைத்திரி!

**‘தலைவர்’கள் ஒருபுறம் ‘பிரதித் தலைவர்கள்’ மறுபுறம்**

**தேர்தலால் பிளவுபட்டு நிற்கும் அண்ணன், தம்பிமார்!**

ஜனாதிபதி தேர்தல் ஒருபுறம் சூடுபிடித்துள்ளது, மறுபுறத்தில் கட்சி தாவுதல், காலைவாருதல், குதிரை பேரம் என சாக்கடை அரசியலுக்கே உரித்தான சம்பவங்களும் அரங்கேறிவருகின்றன.

ஜனாதிபதி தேர்தலால் சிறுகட்சிகள் பிளவுபட்டு நிற்கின்றன. தலைவர் ஒருபுறத்திலும் பிரதித் தலைவர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் மறுபுறத்திலும் நிற்கின்றனர்.

ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், ஐக்கிய மக்கள் கூட்டணி பக்கம் ‘ஏணி’யை வைத்துள்ளார். அக்கட்சியின் பிரதித் தலைவர் வேலுகுமார் ஜனாதிபதி ரணிலுக்கான ஆதரவு பயணத்துடன் இணைந்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவூம் ஹக்கீம் சஜித்துடன் கூட்டு பயணத்தை தொடர்ந்தாலும் அக்கட்சியின் பிரதித் தலைவர் அலி சாஹிர் மௌலானா, ரணில் அணிக்கு தாவியுள்ளார்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சஜித்துக்காக தோகை விரித்தாடிவரும் நிலையில், அக்கட்சியின் பிரதித் தலைவர் இஷாக் ரஹ்மான் ரணிலுக்கு பக்க வாத்தியம் வாசித்துவருகின்றார்.

ரணதுங்க குடும்பத்தில் அண்ணன் அர்ஜுன ரணதுங்க சஜித்துக்காக களமாடிவருகின்றார், தம்பி பிரசன்ன ரணதுங்க ரணிலுக்காக அரசியல் ஆட்டம் ஆடிவருகின்றார்.

காமினி திஸாநாயக்க குடும்பத்தில் அண்ணன் நவீன் திஸாநாயக்க ரணிலுடனும், தம்பி மயந்த திஸாநாயக்க சஜித்துடனும் பயணிக்கின்றனர்.

நீண்ட நாட்களுக்கு பிறகு அண்ணன் மனோ கணேசனும், தம்பி பிரபாகணேசனும் ஒரு கூட்டணியின் கீழ் வந்துள்ளனர். வருகின்ற ஜனாதிபதி தேர்தலில் இருவரும் சஜித்தை ஆதரிக்கின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவராக செயற்பட்ட முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தற்போது அரசியல் ரீதியில் அநாதையாக்கப்பட்டுள்ளார்.

அவருடன் கூட்டணி வைப்பதற்கோ அல்லது அவரின் ஆதரவை பெற்றுக்கொள்வதற்கோ பிரதான அரசியல் கட்சிகள் தயக்கம் காட்டிவருகின்றன.

நீதி அமைச்சராக செயற்பட்ட விஜயதாச ராஜபக்சவுக்கு தலைமைப்பதவியை வழங்குவதற்காக சுதந்திரக் கட்சியின் தலைமைப்பதவியை மைத்திரி துறந்தார். நீதிமன்றமும் அவருக்கு தடை விதித்திருந்தது.

பின்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக விஜயதாச ராஜபக்சவை அவர் பெயரிட்டார். இம்முறை ஜனாதிபதி தேர்தலில் விஜயதாச ராஜபக்ச போட்டியிடுகின்றார்.

எனினும், அவருக்கு ஆதரவளிக்கும் முடிவில் இருந்து மைத்திரிபால சிறிசேன தற்போது பின்வாங்கியுள்ளார்.

சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவளிப்பதற்கு அவர் முன்வந்தபோதிலும் அதற்கு பச்சைக்கொடி காட்டப்படவில்லை என தெரியவருகின்றது. மைத்திரியின் ஆதரவை பெற்றால் அது கத்தோலிக்க வாக்குகளை முற்றாக இல்லாமல் ஆக்கும் என கூறப்பட்டுள்ளது.



இதனால் தனது மகனை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைப்பதற்கு மைத்திரிபால சிறிசேன முயற்சித்துவருகின்றார்.

இதற்கிடையில் ஜனாதிபதி தேர்தலில் தான் எவருக்கும் ஆதரவளிக்கும் முடிவை எடுக்கவில்லை என மைத்திரிபால சிறிசேன நேற்று (16) அறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

**ஆர்.சனத்**


This Time in Sri Lanka!
sky தமிழ்
Media Network
Reg No: PV 00249082
ஸ்கை தமிழ் ஊடக வலையமைப்பு (பிரைவேட்) லிமிடெட்
Sky Tamil Media Network (Pvt) Ltd
ස්කයි ටැමිල් මීඩියා නෙට්වර්ක් (ප්‍රයිවට්) ලිමිටඩ්
துணிந்தெழு
sky தமிழ் AWARDS SRI LANKA -2024-
இலங்கை ஆளுமைகளை
கௌரவிக்கும்
ஸ்கை தமிழ் விருது – 2024
NOMINATIONS NOW OPEN !
விருது வகைகள்:
ஊடகம் மற்றும் பத்திரிகை
இலக்கியம்
சமூக ஊடகங்களில் செல்வாக்கு செலுத்துபவர்
கலை / கலாச்சாரம்
விளையாட்டுத்துறை
சமூக சேவை
வணிகம் / தொழில்முனைவோர்
கல்வி / தொழில்நுட்பம்
விவசாயம்
சிறப்பு விருது
APPLY NOW
விண்ணப்பங்களை அனுப்புவதற்கான இறுதித் திகதி
31 ஆகஸ்ட் 2024
skytamilawards
இன்றே உங்கள் விண்ணப்பங்களை எமக்கு அனுப்பி வையுங்கள்.
Visit our website: www.awards.skytamilnews.com
OFFICIAL PRINT MEDIA PARTNER :
தினகரன்
தினகரன் வாரமஞ்சரி
SUPPORTING PARTNER
CEYLON MEDIA FORUM
DIGITAL MEDIA PARTNER
Metro லீடர் மெட்ரோ LEADER
தமிழ் பேசும் மக்கள் 'நமக்கான நாளிதழ்'

SPORTS லீடர்

sportsml77@gmail.com

# மல்வான உதைபந்தாட்ட சம்பியன் கிண்ணம்



-அஸ்ஹர் இப்றாஹிம்-

மல்வான அல் முபாறக் தேசியக் கல்லூரி பழைய மாணவர்களின் பங்களிப்புடன் ஒழுங்கு செய்திருந்த கம்பஹா மற்றும் களெனிய கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சம்பியன்சிப் போட்டியில் கஹடோவிட்ட அல் பத்ரியா மகா வித்தியாலயம் சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்துக் கொண்டது. எக்ஸ் மொபைல் அனுசரணையில் அல் முபாறக் தேசிய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இச்சுற்றுப் போட்டியில் திகாரிய அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி இரண்டாம் இடத்தையும், உடுகொட அல் அரபா மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக்கொண்டன. இந்நிகழ்விற்கு இலங்கை உதைபந்தாட்ட சங்கத் தலைவர் ஜஸ்வர் உமர் பிரதம அதிதியாகவும் எக்ஸ் மொபைல் நிறுவன தவிசாளர் முஹம்மட் றிஸாம் கௌரவ அதிதியாகவும் உதவி க் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.எம்.தௌஸீர் விஷேட அதிதியாகவும் கலந்து கொண்டனர்.



# சிறந்த வீராங்கனையாக சமரி அத்தபத்து தெரிவு



ICC ஜுலை மாத சிறந்த மகளிர் கிரிக்கெட் வீராங்கனைக்கான விருதை இலங்கை மகளிர் கிரிக்கெட் அணி வீராங்கனை சமரி அத்தபத்து பெற்றுள்ளார்.ஏற்கனவே இரண்டு முறை இந்த விருதை வென்றுள்ள அத்தபத்து தற்போது மூன்றாவது தடவையாகவும் ஜுலை 2024 க்கான ICC இன் மகளிர் கிரிக்கெட் வீராங்கனையாக தேர்வு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# புத்தளம் திகழி முஸ்லிம் மகா வித்தியாலய கரப்பந்தாட்ட அணி சம்பியன்



-அஸ்ஹர் இப்றாஹிம்-

புத்தளம் வலய மட்ட பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதுக்குட்பட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் புத்தளம், திகழி முஸ்லிம் மகா வித்தியாலய அணி முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளது. வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் பயிற்சி மற்றும் வழிகாட்டல் வழங்கிய உடற்கல்வி ஆசிரியர் ஏ.எம்.பாரிஸ், உடற்கல்வி பயிற்சியாளர் எம்.என்.எம் டில்ராஸ் மற்றும் பழைய மாணவர்கள் ஆகியோருக்கு பாடசாலை அதிபர் எம்.ஐ.எம்.ஏ.றஸாக் உள்ளிட்ட கல்வி சமூகம் வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர்.

# கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி சம்பியன்





-அஸ்ஹர் -

கிளிநொச்சி மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கம் நடாத்திய 16 வயதுக்குற்பட்ட பாடசாலை மாணவர்ளுக்கிடையிலான அமரர் இ.விக்கினேஸ் வரமூர்த்தி ஞாபகர்த்த வலைப்பந்தாட்டப் போட்டியில் கிளிநொச்சி புனித திரேசா பெண்கள் கல்லூரி சம்பியனானது. கிளிநொச்சி பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றஇறுதிப்போட்டியில் கிளிநொசிசி பரந்தன் இந்து மகா வித்தியாலயம் மற்றும் புனித திரேசா பெண்கள் கல்லூரி என்பன மோதிக்கொண்டன. 22:18 என்ற புள்ளிக் கணக்கில் புனித திரேசா பெண்கள் கல்லூரி பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தை வீழ்த்தி முதல் இடத்தைப்பெற்று சம்பியனானதுடன் மூன்றாவது இடத்தை முட்கொம்பன் மகா வித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

கிளிநொச்சி மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தின் உப தலைவர் சந்தனம் பெர்ணான்டோ தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் எஸ்.முரளீதரன் பிரதம அதிதியாகவும், மாவட்ட விளையாட்டு உத்தியோகஸ்தர் எம்.மோகனதாஸ், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ரீ.சத்திய மூர்த்தி ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும், கரைச்சி மற்றும் பூநகரி கோட்டக்கல்விப் பணிப்பாளர்கள் விசேட அதிதிகளாகவும் கலந்து கொண்டனர்.

# நுவரெலியா கிரேட்வெஸ்டன் தமிழ் பாடசாலை அணி தேசிய மட்ட கரப்பந்தாட்டப் போட்டிக்கு தகுதி



-அஸ்ஹர் -

மத்திய மாகாணத்தின் 15 கல்வி வலயங்களுக்கிடையில் நடாத்தப்பட்ட மாகாணமட்ட கரப்பந்தாட்டப் போட்டியில் 45 அணிகள் பங்குபற்றின. இப்போட்டியில் நுவரெலியா கிரேட்வெஸ்டன் தமிழ் வித்தியாலய அணி கரப்பந்தாட்ட போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ளது. இப்பாடசாலை நுவரெலியா கல்வி வலயத்தில் காணப்படும் அடிப்படை வசதிகள் எதுவுமற்ற அதி கஷ்டப் பிரதேச பாடசாலை என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை இல.502,பிரதான வீதி, சாய்ந்தமருது -14யில் அமைந்துள்ள மெற்றோ மீடியா நெற்வேர்க் நிறுவனத்தில் 2024.08.17ஆம் திகதி அச்சிட்டுப்பிரசுரிக்கப்பட்டது.